# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1988 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க,

## பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*[1988 ஜூலை மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1988 ஜூலை மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

**1988 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்.**

*[1988, ஜூலை 15 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*ச. வ—ஓ. 27/88*

**1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1988 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 15 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(1) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்ற ஆளொவ்வொருவரும், பிரதம நீதியரசரினால் முடிபுசெய்யப்படக்கூடியவாறு, யூரர் சபையொன்று இன்றித் தனியாக அமருகின்ற மேல் நீதிமன்ற நீதிபதியொருவர் முன்னரான அல்லது யூரர் சபையொன்றில்லாமல் மூன்று நீதிபதிகள் அமருகின்ற நீதாய மேல் நீதிமன்றத்தின் முன்னரான குற்றப்பகர்வொன்றின்மேல், பூர்வாங்க விசாரணையொன்றில்லாமல், விளங்கப்படற்பாலராதல் வேண்டும். நீதாய மேல் நீதிமன்றத்தினால் செய்யப்படும் இச்சட்டத்தின்கீழான தவறுகளின் விளக்கத்துக்கும், அத்துடன் நீதாய மேல்நீதிமன்றத்தினால் நடாத்தப்படும் அத்தகைய ஏதேனும் விளக்கத்தில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கான மேன்முறையீடுகளுக்கும், தண்டனைத் தீர்ப்புகளுக்கும், அத்துடன் கட்டளைகளுக்கும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 450 ஆம் அத்துடன் 451 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

**பாராளுமன்றத்தின்** சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா **150 ; (வெளிநாடு)** ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் **ஆண்டுக்கான** சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.